பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

18 01 2025 **SATURDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஸ்வமித்வா திட்டத்தின்மூலம், இதுவரை இரண்டு கோடிக்கும் மேற்பட்ட கிராமப்புற நில உரிமையாளர்களுக்கு சட்டப்பூர்வமான சொத்துரிமை உறுதி செய்யப்பட்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில், வேட்புமனு பரிசீலனைக்குப்பின், 55 பேரின் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

3. திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் கடற்கரைப்பகுதியில் கடல் மண் அரிப்பை தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து மாநில அமைச்சர்கள் திரு சேகர்பாபு, திரு அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

4. தஞ்சாவூர், திருவாரூர், நாகை, உள்ளிட்ட மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. தில்லி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - இங்கிலாந்தின் **Naiktha Bains** இணை பட்டம் வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>>**

ஸ்வமித்வா திட்டத்தின்மூலம், இதுவரை இரண்டு கோடிக்கும் மேற்பட்ட கிராமப்புற நில உரிமையாளர்களுக்கு சட்டப்பூர்வமான சொத்துரிமை உறுதி செய்யப்பட்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின்கீழ், இன்று 65 லட்சம் குடும்பங்களுக்கு சொத்துரிமை அட்டைகளை வழங்கும் நிகழ்ச்சியில், காணொலி வாயிலாக கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர், 2014-ஆம் ஆண்டு பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு முதல் முறையாக

மத்தியில் ஆட்சிப்பொறுப்பேற்றதிலிருந்து ஸ்வமித்வா திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளை எடுத்ததாக தெரிவித்தார்.

முந்தைய காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு கிராமப்புற மக்களுக்கு சட்டப்பூர்வ சொத்துரிமை வழங்குவதற்கான திட்டத்தை செயல்படுத்த எந்தவொரு முயற்சியும் எடுக்கவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

ஊரக மக்களின் சொத்துரிமை உறுதிசெய்யப்பட்டுள்ளதையடுத்து, பொருளாதார ரீதியாக அவர்கள் வலுப்பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

மழை, வெள்ளம் உள்ளிட்ட பாதிப்புகளின்போதும், பேரிடர் ஏற்படும்போதும் அரசு வழங்கும் நிவாரண உதவிகளை விரைந்து பெற்றுக்கொள்வதற்கு ஸ்வமித்வா திட்டம் பெரிதும் உதவிடும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஆதார் அட்டைகளைபோல, மக்களின் நில உரிமைக்கு தனித்துவமான அடையாளம் கிடைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த எட்டாண்டுகளில் நாட்டில் உள்ள 98 சதவீத நில உடமை பதிவேடுகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்று தேசப்பிதா காந்தியடிகள் குறிப்பிட்டதை சுட்டிக்காட்டிய பிரதமர், இந்தியாவின் உயிர்நாடியாக கிராமங்கள் விளங்குகிறது என்றும் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் பிஜேபி தலைமையிலான அரசு கிராமப்புற மக்களுக்கு அரிய திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2020-ஆம் ஆண்டு முன்னோடித் திட்டமாக தொடங்கப்பட்ட ஸ்வமித்வா திட்டம், கிராமப்புற மக்கள் எளிய முறையில் வங்கிக்கடனுதவி பெறுவதற்கும், நில உரிமை சம்பந்தமான பிரச்சினைகளிலிருந்து விடுபடவும் வழிவகுத்திருப்பதாக திரு நரேந்திர மோடி கூறினார்.

பத்து மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களில் உள்ள 230 மாவட்டங்களை சேர்ந்த நில உரிமையாளர்கள் ஸ்வமித்வா திட்டத்தின்மூலம் பயன்பெற்றிருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்கிபாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது, இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>

சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழாவுக்கான வரவேற்பும், அங்கீகாரமும் ஆண்டுதோறும் வளர்ந்து வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், 2023-ஆம் ஆண்டு 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடன் தொடங்கப்பட்ட இந்த புத்தகத்திருவிழா, 2025-

ஆம் ஆண்டில் ஆயிரத்து 125 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதாக கூறியுள்ளார்.

தமிழக பள்ளிக்கல்வித்துறை மேற்கொண்டுள்ள தனித்துவமான இந்த முன்னெடுப்பு, புதிய மைல்கற்களை அடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சாதனைகளை படைப்பதற்கு மாநில அரசு தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் கடற்கரைப்பகுதியில் கடல் மண் அரிப்பை தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து மாநில அமைச்சர்கள் திரு சேகர்பாபு, திரு அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வுக்குழுவில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு இளம்பகவத், மாநில சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை கூடுதல் செயலர் திரு சந்திரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு ஸ்ரீதர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி, ஐ ஐ டி நிறுவனத்தின் பேராசிரியர்கள் மற்றும் அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர்.

கடல் அரிப்பை தடுப்பதற்கும், நீண்டகால பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் உரிய முயற்சிகள் மாநில அரசிடம் பரிந்துரைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆய்வுக்குழுவினர் தெரிவித்தனர்.

<<<<<>>>>>

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெற்றது.

இதில் திமுக, நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உட்பட 55 பேரின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக மாவட்ட ஆட்சியரும், தேர்தல் அதிகாரியுமான திரு மனீஷ், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - மனீஷ் - 25 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை — விவேகானந்தர் நினைவு பாறைக்கு படகு சவாரி கடல் சீற்றம் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சுற்றுலாப்பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - குமார் - 34 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

தஞ்சாவூர், திருவாரூர், நாகை, உள்ளிட்ட மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருக்கோவிலூர் - ஆசனூர் இருவழிச்சாலையை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிக்கு மாநில அமைச்சர் திரு எ வ வேலு இன்று அடிக்கல் நாட்டினார்.

-------------

சுதந்திரப்போராட்ட தியாகி ஜீவானந்தம் நினைவுநாளையொட்டி, நாகர்கோவிலில் உள்ள மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு ஆட்சியர் திருமதி அழகுமீனா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

---------------

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் முதல் பரிசு வென்ற பாகுபலி காளை சொந்த ஊரான சேலம் மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் அழைத்துவரப்பட்டபோது தாரை தப்பட்டை முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது.

----------------

கிருஷ்ணகிரி மாவட்டம் அம்மனேரி கிராமத்தில் எருதுவிடும் விழா இன்று நடைபெற்றது.

----------------

திருப்பூரில் உள்ள ஒரு தொழிற்சாலையில் பணியாற்றி வந்த பீகார் மாநிலத்தை சேர்ந்த ஐந்து குழந்தை தொழிலாளர்கள் இன்று மீட்கப்பட்டனர்.

-----------------

நாகை மாவட்டம் தேத்தாக்குடியில் முன்னோர்கள் பயன்படுத்திய பாரம்பரிய பொருட்களின் கண்காட்சி நடைபெற்றது.

-------------

பொங்கல் பண்டிகை முடிந்து சென்னை திரும்புவோரின் வசதிக்காக நாளை மறுநாள் காலை காட்டாங்குளத்தூர் - தாம்பரம் இடையே கூடுதலாக ரயில்கள் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

**<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

தில்லி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - இங்கிலாந்தின் **Naiktha Bains** இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-4, 3-6, 10-8 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **'Jessie Aney – Jessica Failla** இணையை வென்றது.

-----------

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணியை, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

ரோஹித் சர்மா தலைமையிலான 15 பேர் கொண்ட இந்த அணியில், சுப்மன் கில் துணை கேப்டனாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

-------------

புதுதில்லியில் நடைபெற்றுவரும் உலகக்கோப்பை கோ கோ போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு அரையிறுதி ஆட்டங்களில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

**<<<<<END>>>>>>**